## கிருஷ்ணகிரி, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வரின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை: மரு. M. பூவதி, MD.,(O&G)**

ந.க.எண்: 670/நி3/2022 நாள்: 12.09.2023

பொருள்: நிர்வாகம் - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - திருமதி. அ. பச்சியம்மாள், பதிவுரு எழுத்தர், தமிழ்நாடு அமைச்சு பணியாளர்களின் சிறப்பு விதிகள் ( 3g ) - ன் கீழ் பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக 14.06.2022 முற்பகலில் பணியில் இணைந்தது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரக கடித ந.க.எண்: 18967/E2/2/2020 - 109, நாள்: 27.05.2022
2. சென்னை, மருத்துவக் கல்வி இயக்குநரக கடித ந.க.எண்: 28454/நி2/5/2020, நாள்: 08.06.2022.
3. இவ்வலுவலக பணிசேர் அறிக்கை கடித ந.க.எண்: 670/நி3/2022, நாள்: 17.06.2022.

<<<0>>>

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் பணியமர்த்தல் ஆணையின்படி திருமதி. அ. பச்சியம்மாள், என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சு பணியாளர்களின் சிறப்பு விதிகள் ( 3g ) - ன் கீழ் பதிவுரு எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு 14.06.2022 முற்பகலில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரியில் பணியில் இணைந்துள்ளார். தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியானது அன்னார் பணியேற்ற நாளான 14.06.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

இதனை தொடர்ந்து தனியர் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

மேலும், தகுதிகாண் பருவ காலத்திற்குள் அனைத்து துறை தேர்வுகளையும் தேர்ச்சிப் பெற வேண்டும் எனவும், அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி (Foundational Training) பவானி சாகரில் முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

12-09-2023

முதல்வர்,
அரசு மருத்துவக் கல்லூரி,
கிருஷ்ணகிரி.

12/9/2023

பெறுநர்
திருமதி. அ. பச்சியம்மாள்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி,
கிருஷ்ணகிரி.

நகல்
1. பணிப்பதிவேடு
2. இருப்பு கோப்பு / உபரி

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை - 6.
2. இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை - 10.

} தகவலுக்காக